முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 309/2022

வா.சா.2 – சரசுவதி

08–08–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2ம் வாதியின் தகப்பனார் இறந்ததற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 27 ஆண்டுகளாக தெரியும். 1ம் வாதியின் கணவர் பெயர் என்ன என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி ராஜேஸ்வரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எதற்காக 1ம் வாதியின் மனுவை நிராகரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க என்னை நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தார்கள் என்றால் 1ம் வாதி அழைத்து வந்தார். 1ம் வாதி லட்சுமியின் சொந்த ஊர் எது என்றால் தாராபுரம். அவருடைய பெற்றோர்கள் அங்கு வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பெற்றோரின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி தான் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியின் மனைவி என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கும் கிருஷ்ணமூர்த்தியின் மூலம் ஒரு மகன், ஒரு மகள் உள்ளார்கள் இந்த சங்கதிகளை மறைத்து வாதிகள் தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிப்பதால் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.08.08 02:22:38 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.